# SEC 3/4 HIGHER TAMIL WORKSHEETS (PAPER 2) - LEVEL 1

## உயர்நிலை 3/4 உயர்தமிழ் தேர்வுப் பயிற்சித்தாள் (தாள் 2) - நிலை 1

## பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | தேர்வுத்தாள் 1 | 1 - 10 |
| 2 | தேர்வுத்தாள் 2 | 11 - 20 |
| 3 | தேர்வுத்தாள் 3 | 21 - 30 |
| 4 | தேர்வுத்தாள் 4 | 31 - 40 |
| 5 | தேர்வுத்தாள் 5 | 41 - 50 |
| 6 | தேர்வுத்தாள் 6 | 51 - 60 |
| 7 | தேர்வுத்தாள் 7 | 61 - 70 |
| 8 | தேர்வுத்தாள் 8 | 71 - 80 |
| 9 | தேர்வுத்தாள் 9 | 81 - 90 |
| 10 | தேர்வுத்தாள் 10 | 91 - 100 |
| 11 | தேர்வுத்தாள் 11 | 101 - 110 |
| 12 | தேர்வுத்தாள் 12 | 111 - 120 |
| 13 | அருஞ்சொற்கள் (தேர்வுத்தாள் 1 to 12) | 121 - 129 |
| 14 | விடைத்தாள் | 130 - 149 |


WORDSMITH
BEYOND LEARNING
SKILLS = JUMP GRADES + ACHIEVE BIG

# தேர்வுத்தாள் 1

80

**'அ' பிரிவு**

**A1 முன்னுணர்வுக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியில் கோடிட்ட இடங்களை மிகப்பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்பவும்.**

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை துடிப்பு மிக்க பாடல்களை எழுதி தமிழகத்திற்கு அறிமுகமானவர். இவர் ஒரு தேசியக்கவிஞர். இந்திய விடுதலைக்காகத் தம் பாட்டுத் திறனை (Q1) ______________________________ பண்பாளர். காந்தியக் கருத்துகளை இனிய கவிகளால் பாடியவர். தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞராகப் பணியாற்றியவர். தமிழன் இதயம் தமிழ்த்தேன், மலைக்கள்ளன் (Q2) ______________________________ அருந்தமிழ் நூல்களை **இயற்றியவர்**. அவர் பல எளிய இனிய பாடல்களை இயற்றியுள்ளார். அவர் இயற்றிய ஒரு பாடலின் கருத்தினைக் கீழே காண்போம்.

கல்விக்கண் திறந்து வைக்கும் ஆசிரியர்களிடத்து மாணவர்கள் (Q3) ______________________________ வைக்காத காரணத்தால் பள்ளிகளில் குழப்பம் உண்டாவதைக் காண்கின்றோம். அரும்பெரும் கருத்துகளை அள்ளி வழங்கும் ஆசிரியர்களை (Q4) ______________________________ தவறாகப் பேசுகின்றனர். பள்ளியில் **ஒழுக்கத்தை**யும் கல்வியையும் கற்றுக்கொள்வதே மாணவர்களின் கடமையாகும். ஆனால், மாணவர்கள் தங்களது கடமையான படிப்பதை விட்டு உரிமைக்காக (Q5) ______________________________. பாடங்களைக் கற்பதைவிட ஒழுக்கத்தைக் கற்பதே சிறந்தது என்ற உண்மை மாணவர்கள் உணரவேண்டும். மேலும் அவர்கள் நல்லொழுக்கத்தை உயிர்போலக் கருதி அதனை வளர்க்க வேண்டும் என்ற மேலான கருத்தினை நாமக்கல் கவிஞர் தம் பாடலில் **வலியுறுத்தியுள்ளார்**.

WORDSMITH BEYOND LEARNING EQ SKILLS = JUMP GRADES + achieve BIG

## A2 பிழை திருத்தம் (10 மதிப்பெண்கள்)

**கீழ்க்காணும் பகுதியின் இடப்பக்கத்தில் ஐந்து வினாக்களின் எண்கள் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் எதிரிலுள்ள வரியில் ஒரு பிழையான சொல் உள்ளது. அந்த ஐந்து வரிகளிலும் உள்ள பிழையான சொற்களைத் திருத்தி அச்சொற்களின் சரியான வடிவத்தை எழுதவும்.**

| | |
|---|---|
| | வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்றால் தமிழில் படிப்பவர் எண்ணிக்கை கூடும். |
| | **மழலையர்** பள்ளிகளைத் தமிழில் நடத்தவேண்டும். தமிழில் கோப்புகளையும் |
| Q6 | குறிப்புகளையும் எழுதும் அலுவலர்களையும் அலுவல ஊழியர்களை ஊக்கப்படுத்த |
| | வேண்டும். தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழ்மொழி மூலம் அறிவியல் கற்பித்தால் |
| Q7 | ஜப்பான், ரஷ்யா, ஜெர்மனி போன்ற நாடுகளின் உள்ள குழந்தைகளைப் போல |
| | முன்னேறுவர். வடமொழிக் கலப்பின்றித் தூய தமிழில் பேசவேண்டும், எழுத வேண்டும் |
| Q8 | என்று வழியுறுத்திய மறைமலையடிகளைப் போல, ஆங்கிலக் கலப்பின்றிப் பேச, |
| | எழுதச் செய்யவேண்டும். தூய தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்திப் பேசும், எழுதும், |
| Q9 | பழகும் முறையை மாணவர்களிடையே நாகரிகமாகக் கருதப்பட வேண்டும். |
| | நடைமுறையில் பயிலும் ஆங்கிலச் சொற்களுக்கு ஏற்ற தூய தமிழ்ச் சொற்களை |
| | அரிந்துகொள்ளுதல் வேண்டும். ஆங்கிலத்தில் எழுதுவது ஒன்றும், ஒலிப்பது ஒன்றுமாக |
| Q10 | இருக்கும். அதனால், ஆங்கிலத்தை வருந்திக்கற்று, அறிவும் ஆற்றலையும் பெறுவர். |
| | தாய்மொழியாகிய தமிழைக் கற்க முன்வருவதில்லை. பெற்றோர்களும் ஆசிரியர்களும் |
| | முனைந்து தங்கள் பிள்ளைகளைத் தமிழ் கற்க ஊக்கப்படுத்த வேண்டும். அவ்வாறு |
| | செய்தால் தமிழ் வாழும் மொழியாக நிலைத்து நிற்கும் என்பதில் **ஐயமில்லை**. |

Q6 ______________________________

Q7 ______________________________

Q8 ______________________________

Q9 ______________________________

Q10 ______________________________

## `ஆ` பிரிவு

**B3 சொற்புணர்ச்சி (10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதவும்.**

Q11 பனிப்பாறை = ________________ + ________________

Q12 சொல்லழகு = ________________ + ________________

Q13 கடலோரம் = ________________ + ________________

Q14 பூவிதழ் = ________________ + ________________

Q15 பாய்மரம் = ________________ + ________________

## 'இ' பிரிவு

**C4 கருத்தறிதல் 1 (22 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பனுவலைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியிற்காணும் வினாக்களுக்கு உனது சொந்த நடையில் விடை எழுதவும்.**

| சிகரம் மின்னிதழ் | உங்கள் கருத்து | சிறப்புக் கட்டுரை | கடந்த இதழ் |
|---|---|---|---|
| | | கொவிட்-19 | |

இன்று உலகம் முழுவதையும் ஆட்டிப்படைக்கும் ஒரு கொள்ளை நோய் கொவிட்19 எனப்படும் கொரோனா கிருமித்தொற்றாகும். பல நாடுகளில் இக்கிருமி தனது **கோரதாண்டவத்தை** நடத்திக்காட்டியுள்ளது. குறிப்பாக ஐரோப்பா, அமெரிக்கா போன்ற பலபகுதிகளைச் சேர்ந்த நாடுகளில் இக்கிருமித்தொற்றினால் அதிக அளவு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. இவற்றைக் கட்டுப்படுத்த உலக சுகாதார நிறுவனம் பலமுயற்சிகளை எடுத்துவருகிறது. எச்ஐவி கிருமியைப் போன்று கொரோனா கிருமியும் உலகில் நீண்டகாலம் வாழக் கூடிய அபாயம் நிலவுவதாகவும், அக்கிருமித்தொற்றை உலகில் இருந்து அடியோடு ஒழிக்கமுடியாமல் போகலாம் எனவும் உலக சுகாதார நிறுவனத்தின் அவசரகால நிபுணர் திரு. மைக் ராயன் **எச்சரித்துள்ளார்.**

காணொளிக் காட்சிவழி செய்தியாளர் சந்திப்பில் பேசிய திரு. மைக் ராயன், கொரோனா கிருமித்தொற்று எவ்வளவு காலம் **நீடிக்கும்** என நிபுணர்கள் பலர் கூறும் கருத்துகளின் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்த முடியாது என்று சொன்னார். எனினும் உலகநாடுகள் பலவும் கிருமித்தொற்றை ஓரளவுக்குக் கட்டுக்குள் கொண்டு வந்திருப்பதைச் சுட்டிக்காட்டிய டாக்டர்

WORDSMITH BEYOND LEARNING EQ SKILLS JUMP GRADES ACHIEVE BIG

மைக் ராயன், கிருமித்தொற்றுத் தடுப்புமருந்து கண்டுபிடிக்கப்பட்டாலும், கிருமித்தொற்றைக் கட்டுப்படுத்தும் பெரிய அளவிலான முயற்சிகள் தொடர வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

தற்போது உலகெங்கும் கொரோனா கிருமித்தொற்றை எதிர்கொள்வதற்கான நூற்றுக்கும் அதிகமான தடுப்பூசிகளைக் கண்டுபிடிக்கும் முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால், அவற்றுள் மிகவும் வெற்றிகரமான தடுப்பூசியைத் தயாரிப்பது சிரமமானது என்று நிபுணர்கள் கருதுகின்றனர். உதாரணமாக, தட்டம்மை உள்ளிட்ட பல கொள்ளை நோய்களுக்கு எதிரான தடுப்பூசிகள் இருப்பதை டாக்டர் ராயன் சுட்டிக்காட்டினார். எனினும், அத்தகைய நோய்கள் இன்னும் உலகில் **பூரணமாக** ஒழிக்கப்படவில்லை.

“கொரோனா கிருமித்தொற்று அபாயத்தைக் குறைக்க, கிருமித்தொற்றைக் கட்டுப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் தேவை” என்றார் டாக்டர் மைக் ராயன். மேலும், தேசிய, வட்டார, உலகளவில் தற்போதைய அபாயநிலை **உச்சத்தில்** இருப்பதாக அவர் சொன்னார். கொரோனா கிருமித்தொற்றைக் கட்டுக்குள் வைத்திருக்கும் அதே வேளையில், பொருளியல் நடவடிக்கைகளை எப்படித் தொடர்வது என்பது குறித்து உலகெங்கும் பல அரசாங்கங்கள் திணறிவருகின்றன. உலகெங்கும் கொரோனா கிருமித்தொற்றால் கிட்டதட்ட 4.3 மில்லியன் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கிருமித்தொற்றுப் பாதிப்பால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 291,000-ஐ தாண்டிவிட்டது. முடக்கநிலையில் இருந்து நாடுகளை மீட்டுப், பொருளியல் நடவடிக்கைகளைப் படிப்படியாகத் தொடரும் அதே நேரத்தில் இரண்டாவது கிருமித்தொற்று அலை எழுவதற்கு எதிராக நம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். எனவே, நமது வாழ்க்கை **இயல்புநிலை**க்குத் திரும்ப நீண்டகாலம் எடுக்கலாம்.

**பிரேமி**

WORDSMITH BEYOND LEARNING

**வினாக்கள்**

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு தெரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப்பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை எழுதவும்.**

Q16 உலக சுகாதார நிறுவனம் எதனைக் கட்டுக்குள் கொண்டுவர முயற்சி செய்கிறது? (2 மதிப்பெண்கள்)

(A) உலகம் முழுவதையும் ஆட்டிப்படைக்கும் ஒரு நோயை

(B) கோவிட் 19 எனப்படும் கொரோனாவை

(C) நோயால் பாதிக்கப்பட்ட நாடுகள்

(D) கொள்ளை நோயின் தீவிரத்தை ( )

Q17 டாக்டர் ராயன் வலியுறுத்திக்கூறும் செய்தி யாது? (2 மதிப்பெண்கள்)

(A) கிருமித்தொற்றை அடியோடு ஒழிக்கமுடியாது என்பது

(B) கிருமித்தொற்றை எப்போது ஒழிக்கமுடியும் என்பதைக் கூற முடியாது

(C) கிருமித்தொற்றைத் தொடர்ந்து கட்டுப்படுத்த முயலவேண்டும் என்பது

(D) தடுப்பு மருந்து கண்டுபிடித்ததும் கிருமித்தொற்று மறைந்துவிடும் என்பது ( )

WORDSMITH
BEYOND LEARNING
EQ SKILLS = JUMP GRADES + ACHIEVE BIG

Q18 கொரோனா கிருமித்தொற்றை வெற்றிகரமாக ஒழிப்பது சிரமம் என நிபுணர்கள் ஏன் கருதுகின்றனர்? (2 மதிப்பெண்கள்)

(A) கொடிய நோய்களைக் கட்டுப்படுத்த முடியாது என்பதால்

(B) பூரணமாகக் குணப்படுத்தும் தடுப்பூசி இன்னும் கண்டுப்பிடிக்கவில்லை என்பதால்

(C) கொரொனாவும் தட்டம்மைப் போன்று கொடிய நோய் என்பதால்

(D) தடுப்பு மருந்து கண்டுபிடித்ததும் கிருமித்தொற்று மறைந்துவிடும் என்பதால் ( )

Q19 பின்வரும் வாக்கியத்திலுள்ள எழுவாய், ஐந்தாம் வேற்றுமை உருபு ஏற்ற சொல் ஆகியவற்றைக் கண்டறிந்து எழுதவும். (4 மதிப்பெண்கள்)

*"கொரோனா கிருமித்தொற்று அபாயத்தைக் குறைக்க, கிருமித்தொற்றைக் கட்டுப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் தேவை" என்றார் டாக்டர் மைக் ராயன்.*

i. எழுவாய்

______________________________

ii. ஐந்தாம் வேற்றுமை உருபு ஏற்ற சொல்

______________________________

**Q20 சுருக்கி வரைதல் (12 மதிப்பெண்கள்)**

கொவிட்-19 கிருமித்தொற்றைப் பற்றி உலக சுகாதார நிறுவனத்தின் கருத்தைக் குறித்துக் கட்டுரையாசிரியர் கூறியுள்ளவற்றைப் பொருள் பிறழாது உன் சொந்த நடையில் 40 சொற்களில் சுருக்கி எழுதவும்.

WORDSMITH
BEYOND LEARNING
EQ SKiLLS = JUMP gRADES + achieve Big

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

**‘ஈ’ பிரிவு**

**C5 கருத்தறிதல் 2 (28 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பனுவலைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியிற்காணும் வினாக்களுக்கு உம் சொந்த நடையில் விடைதருக.**

ஆதிமனிதன் **நாடோடி**யாகக் காடுகளில் அலைந்து திரிந்தான்; விலங்குகளை வேட்டையாடி அதன் **மாமிசத்தை** உண்டு வாழ்ந்து வந்தான். காலப்போக்கில் அவன் ஆற்றங்கரை ஓரமாகத் தங்கி நிலையாக வாழத் தலைப்பட்டான். அப்போது அவன் வேட்டையாடுதலை விட்டுப் பயிரிடக் **கற்றுக்கொண்டான்**. இவ்வாறு தோன்றியதுதான் ஆற்றுவெளி **நாகரிகமாகும்**. மனிதன் பயிரிட்டு வாழத் தொடங்கியது முதல் இன்றுவரை **வேளாண்மை** மனித வாழ்வில் ஓர் இன்றியமையாத **கூறாகத்** திகழ்கிறது. பல நூறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மனிதன் வேளாண்மைத் தொழிலில் ஈடுபடத் தொடங்கிய போது கல் கோடாரிகளை மரம்வெட்டவும் கூர்மையான குச்சிகளை நிலத்தைக்கீறி விதை விதைக்கவும் பயன்படுத்திக் கொண்டான். பிறகு அவன் வாழ்ந்த காலச்சூழலின் தன்மைக்கு ஏற்ப அவ்வப்போது வேளாண்மைத் தொழிலில் சில மாற்றங்களைச் செய்துகொண்டான். ஆனால், இன்றளவும் அவன்தன் முன்னோர்களிடமிருந்து கற்றுக்கொண்ட விதை விதைத்தல், பயிர் பாதுகாப்பு, **அறுவடை** முதலிய வேளாண்மை முறைகளைத் தலைமுறை தலைமுறையாகக் கடைப்பிடித்து வருகிறான்.

நீரின்று அமையாது உலகம் என்றார் வள்ளுவர். இந்த பூமியில் பச்சை புற்கள் கூட தண்ணீர் இல்லாவிட்டால் முளைக்காது. பூமியிலே உள்ள எல்லா உயிரினங்களும் நீரை நம்பியே வாழ்கின்றன. இந்த பூமியின் ஆதாரமே நீர் என்பதால் தண்ணீர் இல்லாமல் இந்த உலகத்தில் எந்த தொழிற்பாடுகளும் நடைபெறமாட்டாது. மனிதனின் உயிர் வாழ்வுக்கு உணவு எப்படி இன்றியமையாததோ அதுபோல வேளாண்மைக்கு நீர் இன்றியமையாதது. வேளாண்மைக்கு அடிப்படையான நீரை அன்று தவறாது பெய்த **பருவமழை** அவனுக்குக் கொடுத்தது. மழைநீரை ஆறு, குளம், ஏரிகளில் தேக்கி வைத்துத் தன் தேவைக்கு ஏற்பப் பயன்படுத்தினான். காலப்போக்கில் பருவநிலை மாறுதல்களால் மழைவளம் குறைந்தது. அதனால் வேளாண்மைத்

தொழில் பாதிப்பு ஏற்பட்டது. இதனைச் சரிகட்ட **நிலத்தடிநீரை** வெளிக்கொணரப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள் ஒன்றுதான் கிணறு தோண்டி நீரைப் பெறும் முறை.

உலக நாகரிகத்தின் தொட்டில் எனக் கருதப்படுபவை மண்ணில் **<u>அமிழ்ந்துப்</u>** போன மொகஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய நகரங்கள் ஆகும். இந்நகரை ஆய்வு செய்த **தொல்லியல் நிபுணர்**கள் அங்குப் பல கிணறுகளைக் கண்டுபிடித்தனர். இவை அந்நகர மக்கள் நிலத்தடி நீரை வெளிக்கொணர்ந்து பயன்படுத்தும் முறையை அறிந்திருந்தனர் என்பதற்குச் சான்றாகும்.

மழைவளம் இல்லாமல் பயிர்த்தொழில் பாதிக்கப்படும்போது நிலத்தடி நீர்வளத்தைக் கண்டறிய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அக்கால உழவர்கள் தங்கள் அனுபவம், பட்டறிவு ஆகியவற்றின் அடிப்படையில் நீர்பெற மேற்கொண்ட முயற்சியே நம்பிக்கை சார்ந்த முறை எனப்படும். மாறாகக் கருவிகளைப் பயன்படுத்தி நீர்பெறும் முறை அறிவியல் சார்ந்த முறை என்றழைக்கப்படுகிறது. இக்காலத்தில் உழவுத்தொழில் அறிவியல் சார்ந்த முறையையே அதிகம் நம்பியிருக்கிறது. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி குறைந்த நாட்களில் அதிக விளைச்சலைக் கொண்டுவருவதே அறிவியல் சார்ந்த முறையின் சிறப்பாகும்.

**வினாக்கள்**

Q21 பயிரிட்டு வாழத் தொடங்கியது முதல் இன்றுவரை வேளாண்மைத் தொழிலில் மனிதன் சந்தித்த வளர்ச்சி படிநிலைகள் யாவை? (6 மதிப்பெண்கள்)

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

WORDSMITH BEYOND LEARNING EQ SKILLS = JUMP GRADES + ACHIEVE BIG

Q22 நீரின்றி அமையாத உலகு என்னும் தொடர் மூலம் வள்ளுவர் எக்கருத்தினை வெளிப்படுத்துகின்றார்? (5 மதிப்பெண்கள்)

Q23 மனிதன் எதற்காக நிலத்தடி நீரைப்பெற முயன்றான்? (5 மதிப்பெண்கள்)

Q24 மேற்கண்ட பனுவலைப் படித்த குமுதாவும் ஷிவானியும் கருத்துரைக்கின்றனர்.




குமுதாவின் கருத்தினை ஷிவானி ஏற்றுக்கொள்வதற்கான இரண்டு காரணங்களைப் பனுவலை அடிப்படையாகக் கொண்டு எழுதவும். (4 மதிப்பெண்கள்)

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

WORDSMITH
BEYOND LEARNING

**Q25 சொற்பொருள் (8 மதிப்பெண்கள்)**

பின்வரும் சொற்கள் மேற்கண்ட பனுவலில் இடம்பெற்றுள்ளன. அவை உணர்த்தும் பொருளை எழுதவும்.

i. மாமிசத்தை - ______________________

ii. கற்றுக்கொண்டான் - ______________________

iii. கூறாக - ______________________

iv. அமிழ்ந்துப் - ______________________

## SEC 3/4 HIGHER TAMIL WORKSHEETS (PAPER 2) - LEVEL 1

### உயர்நிலை 3/4 உயர்தமிழ் தேர்வுப் பயிற்சித்தாள் (தாள் 2) - நிலை 1

### அருஞ்சொற்பொருள்

| தேர்வுத்தாள் 1 | | | |
|---|---|---|---|
| **எண்** | **அருஞ்சொல்** | **பொருள்** | **English Meaning** |
| 1 | இயற்றியவர் | எழுதியவர் | Writer |
| 2 | ஒழுக்கம் (ஒழுக்கத்தை) | நடத்தை | Good conduct |
| 3 | வலியுறுத்துதல் (வலியுறுத்தியுள்ளார்) | செய்ய சொல்லுதல் | Emphasize |
| 4 | மழலையர் | இளம் பாலகர்கள் | Child / Nursery |
| 5 | ஐயமில்லை | சந்தேகமில்லை | No doubt |
| 6 | கோரதாண்டவம் (கோரதாண்டவத்தை) | பயமுறுத்தும் வகையில் | Severity |
| 7 | எச்சரித்தல் (எச்சரித்துள்ளார்) | முன்னறிவிப்பு | Warning |
| 8 | நீடிக்கும் | தொடரும் | Prolong |
| 9 | பூரணம் (பூரணமாக) | முழுமை | Perfection |
| 10 | உச்சம் (உச்சத்தில்) | மோசமான நிலை | Peak |
| 11 | இயல்புநிலை | இயல்பான சூழல் | Default |
| 12 | நாடோடி | இடம்பெயர்ந்து வாழும் மனிதன் | Nomad |
| 13 | நாகரிகம் (நாகரிகமாகும்) | சமூக வாழ்க்கை முறை | Civilization |
| 14 | வேளாண்மை | விவசாயம் | Agriculture |
| 15 | அறுவடை | பயிர்களை அறுப்பது | Harvest |
| 16 | பருவமழை | - | Monsoon |
| 17 | நிலத்தடி நீர் (நிலத்தடிநீரை) | பூமிக்கடியில் உள்ள நீர் | Ground water |
| 18 | தொல்லியல் நிபுணர் | - | Archaeologist |

| | | | |
|---|---|---|---|
| 10 | பரிணாமம் (பரிணாம) | படிப்படியான மாற்றம் | Transformation |
| 11 | செறிவு | அடர்த்தி | Thickness |
| 12 | சூறையாடுதல் (சூறையாடி) | கொள்ளையடித்தல் | Plunder |
| 13 | அனுபவம் (அனுபவத்தால்) | - | Experience |
| 14 | நிவர்த்தி | தீர்வு | Solution |
| 15 | மூடநம்பிக்கை | - | Wrong belief |
| 16 | துல்லியம் (துல்லியமாக) | மிகவும் சரி | Accurate |
| **தேர்வுத்தாள் 4** | | | |
| 1 | தாக்குதல் (தாக்கினால்) | போரிடுதல் | Attack |
| 2 | அணுகி | நெருங்கி | Approach |
| 3 | சட்டென்று | உடனே | Immediately |
| 4 | பிதுங்கின | வெளிவந்தன | Bulge |
| 5 | நாட்குறிப்பு | நாள்காட்டி | Calender |
| 6 | வகித்தல் (வகித்தவர்) | திகழ்தல் | Serving |
| 7 | இடையூறு | தடை | Obstacle |
| 8 | கருமம் | செயல் | Action |
| 9 | இழுக்கு | தாழ்வு | Disgrace |
| 10 | வீழ்ச்சி | தோல்வி | Failure |
| 11 | பூஞ்சோலை | பூந்தோட்டம் | Flower garden |
| 12 | சோம்பி | சோம்பேறி | Lazy |
| 13 | பொருளீட்டுதல் (பொருளீட்ட) | பணம் சம்பாதித்தல் | Making money |
| 14 | தட்டிக்கழித்தல் (தட்டிக்கழிக்க) | சாக்குபோக்குச் சொல்லுதல் | Dodge |
| 15 | புனிதம் (புனிதமான) | தூய்மை | Holy |
| **தேர்வுத்தாள் 5** | | | |
| 1 | ஊதியம் (ஊதியத்தில்) | வருமானம் | Income |
| 2 | மேற்கொள்ளுதல் (மேற்கொண்டார்) | ஏற்றுக்கொள்ளுதல் | Adopt |

WORDSMITH BEYOND LEARNING EQ SKILLS = JUMP GRADES + ACHIEVE BIG

**SEC 3/4 HIGHER TAMIL WORKSHEETS (PAPER 2) - LEVEL 1**
**உயர்நிலை 3/4 உயர்தமிழ் தேர்வுப் பயிற்சித்தாள் (தாள் 2) - நிலை 1**

## விடைகள்

### தேர்வுத்தாள் 1

**A1 முன்னுணர்வுக் கருத்தறிதல்**

Q1 பயன்படுத்திய
Q2 முதலிய
Q3 மதிப்பு
Q4 பற்றி
Q5 போராடுகின்றனர்

**A2 பிழை திருத்தம்**

Q6 ஊழியர்களையும்
Q7 நாடுகளில்
Q8 வலியுறுத்திய
Q9 முறை
Q10 இருப்பினும்

**B3 சொற்புணர்ச்சி**

| | | | |
|---|---|---|---|
| Q11 | பனி | + | பாறை |
| Q12 | சொல் | + | அழகு |
| Q13 | கடல் | + | ஓரம் |
| Q14 | பூ | + | இதழ் |
| Q15 | பாய் | + | மரம் |

WORDSMITH
BEYOND LEARNING
EQ SKILLS = JUMP GRADES + ACHIEVE BIG

**C4 கருத்தறிதல் 1**

Q16 B
Q17 C
Q18 B
Q19 (i) டாக்டர் மைக் ராயன்
(ii) கட்டுப்படுத்துவதில்

Q20 கொவிட் 19 கிருமித்தொற்றை முழுமையாக இவ்வுலகிலிருந்து அழிக்க முடியாது. பிற கொடிய நோய்களைப் போல கொரோனாவும் உலகில் நீண்ட காலம் வாழக் கூடிய ஆபத்தை ஏற்படுத்தும். ஆகையால், இந்நோயை முழுமையாக அழிக்க மக்களுக்கு நம்பகத் தன்மையை உறுதிப்படுத்தவும் முடியாது. தடுப்பூசிகள் கண்டுபிடிக்கப்பட்டாலும், கிருமித்தொற்றைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள் மேலும் தொடர வேண்டும் ஆகிய கருத்துகளை உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

**C5 கருத்தறிதல் 2**

Q21 மனிதன் பயிரிட்டு வாழத் தொடங்கியது முதல் இன்றுவரை வேளாண்மைத் தொழிலில் பல வளர்ச்சிகளைக் கண்டுள்ளான். அதாவது, வேளாண்மைத் தொழிலில் ஈடுபடத் தொடங்கிய போது கல் கோடாரிகளை மரம்வெட்டவும் கூர்மையான குச்சிகளை நிலத்தைக்கீறி விதை விதைக்கவும் பயன்படுத்திக் கொண்டான். பிறகு, அவன் வாழ்ந்த காலச்சூழலின் தன்மைக்கு ஏற்ப அவ்வப்போது வேளாண்மைத் தொழிலில் சில மாற்றங்களைச் செய்து கொண்டான். ஆனால், இன்றளவும் அவன் தன் முன்னோர்களிடமிருந்து கற்றுக்கொண்ட விதை விதைத்தல், பயிர் பாதுகாப்பு, அறுவடை முதலிய வேளாண்மை முறைகளைத் தலைமுறை தலைமுறையாகக் கடைப்பிடித்து வருகிறான்.

Q22 இந்தப் பூமியில் பச்சை புற்கள் கூட தண்ணீர் இல்லாவிட்டால் முளைக்காது. பூமியிலே உள்ள எல்லா உயிரினங்களும் நீரை நம்பியே வாழ்கின்றன. இப்பூமியின் ஆதாரமே நீர் என்பதால் தண்ணீர் இல்லாமல் இந்த உலகத்தில் எந்தத் தொழிற்பாடுகளும் நடைபெறாது. மனிதனின் உயிர்வாழ்வுக்கு உணவு இன்றியமையாதது போல வேளாண்மைத் தொழிலுக்கு நீர் இன்றியமையாதது. வேளாண்மைக்கு அடிப்படையான நீரைப் பருவ மழை கொடுத்தது. இக்கருத்தையே நீரின்றி அமையாது உலகு என்னும் தொடர்மூலம் வள்ளுவர் வெளிப்படுத்துகின்றார்.

Q23 பருவநிலை மாறுதல்களால் மழை வளம் குறைந்தது. ஆறு, ஏரி, குளங்களில் நீர் வளம் குறைந்தது. அதனால், வேளாண்மைத் தொழில் பாதிப்படைந்தது. வேளாண்மைத் தொழிலைப் பாதுகாக்க, மழைநீர்க் குறைவினைச் சரிகட்ட மனிதன் நிலத்தடி நீரைப்பெற முயன்றான்.

Q24 கருவிகளைப் பயன்படுத்தி நீர் பெறும் முறையாகிய அறிவியல் சார்ந்த முறையே இக்காலத்தில் சாத்தியமாகிறது. இதுவே தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி குறைந்த நாட்களில் அதிக விளைச்சலைக் கொண்டு வருகிறது. இதனால்தான் இக்காலத்தில் நீர்பெற நம்பிக்கை சார்ந்த முறை சாத்தியமில்லை எனும் குமுதாவின் கூற்றை ஷிவானி ஏற்றுக்கொள்கிறாள்.

Q25 **சொற்பொருள்**

i. இறைச்சியை
ii. தெரிந்துகொண்டான்
iii. அங்கமாக / பிரிவாக
iv. புதைந்து

## தேர்வுத்தாள் 2

**A1 முன்னுணர்வுக் கருத்தறிதல்**

Q1 இனிமை
Q2 அதிகரிக்கின்றது
Q3 புத்துணர்ச்சி
Q4 தெரியாமல் / இல்லாமல்
Q5 இந்நோன்பு, / உண்ணாநோன்பு

**A2 பிழை திருத்தம்**

Q6 வருகின்றனர்
Q7 வெறுத்தனர்
Q8 திகழ்கின்றது
Q9 ஓர்
Q10 உள்ளன